நாள் : 5-11-2009

## மனித வளர்ச்சிக்காக மாநில திட்டங்களை வலுப்படுத்துதல் குறித்த பயிலரகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம் முருகன் திருமண மண்டபத்தில் மனித வளர்ச்சிக்காக மாநில திட்டங்களை வலுப்படுத்துதல் குறித்த ஒரு நாள் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.ஆபிரகாம் இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர் ஒரு நாள் பயிற்சியின் கையேட்டினை வெளியீட்டு மாவட்ட ஆட்சியர் பேசியதாவது. தமிழக அரசின் திட்டங்கள், மனித ஆற்றல் ஆகியவை சிறந்த முறையில் செயல்படுத்த மனித சக்தி முக்கிய பங்காற்றுகிறது. இந்தியா இயற்கை வளங்கள், கனிம வளங்கள், மித வெப்ப நிலை கொண்ட நாடாக நிகழ்கிறது. ஐரோப்பா, ஆப்பிக்கா நாடுகளை ஒப்பிடும் போது மனித சக்தியை பொருத்தவரை இந்தியா முதன்மை நாடாக திகழ்கிறது. 10 ஆண்டுகளில் இந்தியா, சீனா தவிர ஏனைய நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்தியாவிற்கு எந்த விதமான பொருளாதார பாதிப்பும் ஏற்படவில்லை, அதனை போன்று ஏனைய நாடுகளில் ஓரே சீரான தட்ப வெப்ப நிலை கிடையாது. இந்தியாவிற்கு அந்த குறை கிடையாது, இந்தியா மித வெப்பமான நாடாக உள்ளது. இவை எல்லாவற்றை விட மனித சக்தி கொண்ட நாடாக இந்தியா உள்ளது. மனித வளத்தை எந்த வகையில் அதிகமாக பயன்படுத்திகிறோமோ அவற்றை கொண்டு அரசின் திட்டங்கள், மனித ஆற்றலை சிறந்த முறையில் செயல்படுத்த முடியும் இந்த பயிலரங்கத்தில் கலந்து கொண்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பயிற்சியை கொண்டு சிறப்பாக செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திரு.சடையப்ப விநாயக மூர்த்தி, அரியலூர் கோட்டாட்சியர் ஜீவரெத்தினம், மகளிர் திட்ட அலுவலர் வசந்தி, வட்டாட்சியர் எட்டியப்பன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னதாக திட்ட அலுவலர் திரு.வெங்கடாசலம் வரவேற்றார். முடிவில் மண்டல ஊரக வள்ர்ச்சி பயிற்சி (இணை இயக்குநர்) ராஜ்மோகன் நன்றி கூறினார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.